**முக்கியம்!**

நீங்கள் செலான் வீசா/மாஸ்டர் அட்டை ஒன்றைப் பயன்படுத்துவதற்கு முன் கடன் அட்டை வைத்திருப்பவருக்கான இந்த ஒப்பந்தத்தை வாசிக்க வேண்டும். இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள "அட்டை" என்ற பதம் பின்வரும் செலான் கடன் அட்டைகளுள் ஒன்றை அல்லது அவற்றின் தொகுதி ஒன்றைக் குறிக்கும்:

- செலான் வீசா / பிளட்டினம் / கோல்ட் / கிளசிக்
- செலான் மாஸ்டர் டைட்டேனியம் / கோல்ட் / கிளசிக்

நீங்கள் இந்த அட்டைகளைப் பயன்படுத்துவதன் மூலம் கீழே தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதுடன் அவற்றிற்குக் கட்டுப்பட்டு நடக்கவும் இணங்குகின்றீர்கள்.

செலான் வீசா/மாஸ்டர் அட்டைகள் (அட்டை) பின்வரும் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் செலான் வங்கி பி.எல்.சி. (வங்கி) இனால் வழங்கப்படுகின்றன.

## கடன் அட்டை வைத்திருப்பவர் ஒப்பந்தம்

நான்/நாம் இத்தால் செலான் வங்கிக் கடன் அட்டை ஒன்றிற்கு (அட்டைகளுக்கு) விண்ணப்பம் செய்வதுடன், இவ் விண்ணப்பத்திலும் இதனுடனான ஏதேனும் இணைப்பிலும் (இருப்பின்) வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சகல வழிகளிலும் உண்மையானவை மற்றும் சரியானவை என்றும் உத்தரவாதம் அளிக்கிறேன்/அளிக்கிறோம். எனக்காக/எமக்காக கணக்கு ஒன்றை ஆரம்பிக்கும்படியும் அட்டையை (அட்டைகளை) இரண்டாகக் கிழித்து உங்களிடம் மீள ஒப்படைப்பதன் மூலம் அதன் (அவற்றின்) பாவனைக்கான எனது/எமது உரிமையைக் கைவிடும் வரை அட்டையை (அட்டைகளை) புதுப்பிக்கும்படி அல்லது பதிலீடு செய்யும்படியும் நான்/நாம் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்/கேட்டுக்கொள்கிறோம்.

காலத்திற்குக் காலம், என்னிடம்/எம்மிடம் கேட்காமலே, ஏதேனும் தகவலை எனது/எமது வங்கியாளர்களிடமிருந்து அல்லது பொருத்தமெனக் கருதும் வேறேதும் இடத்திலிருந்து விசாரித்து ஊர்ஜிதம் செய்ய நான்/நாம் செலான் வங்கி பி.எல்.சி.க்கு இத்தால் அதிகாரம் அளிக்கிறேன்/அளிக்கிறோம்.

எனது/எமது கடன் அட்டையை (அட்டைகளை) செலான் வங்கி பி.எல்.சி.யினால் முன்வைக்கப்பட்டுள்ள செலான் வங்கி அட்டை வைத்திருப்பவர் ஒப்பந்தத்திற்கு அமைவாக மட்டுமே பயன்படுத்த முடியும் என்பதை நான்/நாம் ஏற்றுக்கொள்கிறேன்/ ஏற்றுக்கொள்கிறோம். அத்துடன், இக் கடன் அட்டையுடன் எனக்கு/எமக்கு வழங்கப்பட்டு, என்னால்/எம்மால் வாசித்துப் புரிந்துகொள்ளப்பட்ட செலான் வங்கி அட்டை வைத்திருப்பவர் ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளவும் அவற்றிற்குக் கட்டுப்பட்டு நடக்கவும் நான்/நாம் இணங்குகின்றேன்/இணங்குகின்றோம்.

வெளிநாட்டில் வர்த்தக ரீதியில் பெருமளவு பொருள்களைக் கொள்வனவு செய்யவும் மூலதனத்தை இலங்கைக்கு வெளியே அனுப்பீடு செய்யவும் கடன் அட்டையைப் பயன்படுத்த முடியாது என்பதை நான்/நாம் ஏற்றுக்கொள்கிறேன்/ஏற்றுக்கொள்கிறோம்.

நான்/நாம் குடிகலும் பட்சத்தில் அல்லது வெளிநாட்டில் தொழில்புரியச் செல்லும் பட்சத்தில், சகல நிலுவைகளையும் முழுமையாகச் செலுத்திவிட்டு, அட்டையை (அட்டைகளை) வங்கியிடம் மீள ஒப்படைக்க நான்/நாம் இணங்குகின்றேன்/இணங்குகின்றோம்.

எனது/எமது (இனிமேல் “அட்டை வைத்திருப்பவர்” என்று குறிப்பிடப்படுவார்) வேண்டுதலுக்கிணங்க வழங்கப்பட்ட பிரதான அட்டை மற்றும் மேலதிக அட்டைகள் தொடர்பிலான சகல அறவீடுகளுக்கும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாளியாகுவதற்கு நான்/நாம் இணங்குவதுடன், அத்தகைய கொடுப்பனவுகள் அனைத்தும் கேட்டவுடன் செலுத்தப்படுமெனவும் வாக்குறுதி அளிக்கிறேன்/அளிக்கிறோம்.

2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கல் தடுப்புச் சட்டத்தின் (PMLA) ஏற்பாடுகள், 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டம் (FTRA) மற்றும் அதனுடன் தொடர்புடைய வழிகாட்டுதல்கள் மற்றும் பணிப்புரைகள், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கியியல் சட்டம், மேற்குறிப்பிட்ட 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கியியல் (திருத்த) சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளின் (அத்தகைய சட்டத்தின் பிரகாரம்

கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பான வழிகாட்டுதல்கள் மற்றும் பணிப்புரைகளும் இவற்றில் உள்ளடங்கும்) ஏற்பாடுகள் ஆகியவற்றை நான்/நாம் அறிந்துள்ளேன்/ அறிந்துள்ளோம் என்பதை நான்/நாம் ஊர்ஜிதம் செய்கிறேன்/செய்கிறோம். இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கி ஒன்றின் செயற்பாடுகள் தொடர்பிலான மேற்குறிப்பிட்ட மற்றும் சகல சட்டங்கள், பணிப்புரைகள். வழிகாட்டுதல்கள் சம்பந்தமான ஏற்பாடுகளுக்கு வங்கியானது எல்லா வேளைகளிலும், தேவைக்கேற்ப, பணிந்தொழுகும் என்பதை நான்/நாம் புரிந்துகொண்டு அதற்க்கு இணங்குவதை ஊர்ஜிதம் செய்கிறேன்/செய்கிறோம்.

செலான் வங்கி பி.எல்.சி. (இனிமேல் “வங்கி” என்று அழைக்கப்படும்) தனது பூரண தற்றுணிபின் பேரில் இந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள அல்லது எவ்வித காரணமும் காட்டாமல் நிராகரிக்க உரிமை கொண்டுள்ளது என்பதை நான்/நாம் ஏற்றுக்கொள்கிறேன்/ ஏற்றுக்கொள்கிறோம். அத்துடன், இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை அனுசரித்து நடக்க நான்/நாம் எவ்வித மறுப்பிற்கும் இடமின்றி இணங்குகின்றேன்/இணங்குகின்றோம்.

## வரைவிலக்கணங்கள்

இந்த விதிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள பிரதான சொற்கள், சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தாவிடின், பின்வரும் அர்த்தங்களைக் கொண்டிருக்கும். “ஒப்பந்தம்” என்பது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் இந்த ஒப்பந்தத்தின் விதிகளுக்கேற்ப காலத்திற்குக் காலம் மாற்றப்படக்கூடிய விதிகளைக் குறிக்கும். சேவைகளை வழங்குவதற்காக காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் ஏதேனும் மேலதிக விதிகளும் அவற்றில் அடங்கும். அவையும் இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அமையும்.

## பொருள் விளக்கம்

சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தாவிடின் அல்லது குறித்துரைக்காவிடின்,

(a) தலைப்புக்கள் வசதிக்காக மட்டுமே தரப்பட்டுள்ளன. அவை இந்த அட்டை வைத்திருப்பவர் ஒப்பந்தத்தின் அமைப்பைப் பாதிக்க மாட்டா.

(b) “உட்பட” என்பது போன்ற சொற்கள் எவ்வித வரைறைகளையும் குறிக்க மாட்டா.

(c) அட்டை வைத்திருப்பவர் என்ற சொல் ஏதேனும் மேலதிக அட்டை வைப்பாளர்களையும் குறிப்பிடுவதுடன், அவர்களையும் உள்ளடக்கும்.

(d) அட்டை என்ற சொல் செலான் வங்கி பி.எல்.சி.யினால் வழங்கப்பட்ட ஏதேனும் அட்டையை/அட்டைகளை (செலான் பிளட்டினம் வீசா/ஃபிறீடம் மாஸ்டர் கார்ட்/கோல்ட் வீசா/செலான் கிளசிக் வீசா கார்ட்) குறிக்கும். வழங்கப்பட்ட ஏதேனும் மேலதிக அட்டையும்/அட்டைகளும்) அவற்றில் உள்ளடங்கும்.

(e) ஒரு தரப்பில் ஒன்றிற்கு மேற்பட்ட ஆட்கள் இருந்தால், அவர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாளியாவார்கள்.

(f) ஒருமைச் சொற்கள் பன்மைச் சொற்களையும் பன்மைச் சொற்கள் ஒருமைச் சொற்களையும் உள்ளடக்கும். ஆண்பால் சொற்கள் பெண்பால் சொற்களையும் பெண்பால் சொற்கள் ஆண்பால் சொற்களையும் உள்ளடக்கும்.

(g) ஏதேனுமொரு சொல் அல்லது பதம் இந்த ஒப்பந்தத்திலுள்ள ஒரு வரைவிலக்கணத்துடன் தொடர்புடையதாக இருப்பின், அச் சொல் அல்லது பதம் சம்பந்தப்பட்ட வரைவிலக்கணத்திற்கு இசைவான அர்த்தத்தைக் கொண்டிருக்கும்.

(h) சரத்துக்கள் அல்லது வேறு அடையாளங்காட்டிகளின் பிரயோகங்கள் இந்த ஒப்பந்தத்திற்கானவை மட்டுமே. அட்டை செயற்படுத்தப்படும் வேளையில், இந்த அட்டை வைத்திருப்பவர் ஒப்பந்தத்திலுள்ள சகல விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அட்டை வைத்திருப்பவர் இணங்கியுள்ளார் என்று கொள்ளப்படும் என்பது இரு தரப்பினராலும் இரு தரப்பினருக்கு இடையிலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

(i) “பணம்” என்பது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வெளிநாட்டு அரசாங்கம் ஒன்றினால் வழங்கப்பட்ட, ஸ்தாபிக்கப்பட்ட, அதிகாரமளிக்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட பண அலகினை அல்லது பரிவர்த்தனை ஊடகத்தைக் குறிக்கும்.

(j) “பணப் பெறுமதி” என்பது பணமாக மீட்கக்கூடிய அல்லது மீட்க முடியாத ஒரு பரிவர்த்தனை ஊடகத்தைக் குறிக்கும். சேமிக்கப்பட்ட பெறுமதி, கொடுப்பனவுப் பத்திரம், கணக்கிற்கான வரவு என்பனவும் தங்க நாணயம், தங்கம் என்பவும் இதில் உள்ளடங்கும்.

## 1. அட்டை

1.1 அட்டையானது வங்கியின் உடைமையாகும். வங்கி கோரும் பட்சத்தில் அட்டை வைத்திருப்பவர் அதனை உடனடியாக வங்கிக்கு மீளளிக்க வேண்டும்.

1.2 வங்கியானது தனது பூரண தற்றுணிபின் பேரில் முன்னறிவித்தல் கொடுக்காமலும் காரணம் காட்டாமலும் எந்த நேரத்திலும் அட்டை மற்றும் அதனைப் பயன்படுத்த அட்டை வைத்திருப்பவர் கொண்டுள்ள உரிமையை வாபஸ் பெறவும் ஏதேனும் அட்டைக் கொடுக்கல் வாங்கலுக்கான அதிகாரமளிப்பு வேண்டுகோளை மறுக்கவும் முடியும்.

## 2. அட்டையின் விநியோகம் மற்றும் பாவனை

2.1 அட்டை கிடைத்தவுடன் அட்டை வைத்திருப்பவர் அதன் பின்புறத்தில் கையொப்பமிடுவதோடு, அதனை வேறெவரும் பாவிக்க அனுமதிக்கவும் கூடாது. எல்லா வேளைகளிலும் அதனைப் பாதுகாத்து தனது சொந்தப் பாதுகாப்பிலும் கட்டுப்பாட்டிலும் வைத்திருப்பது அவரின் பொறுப்பாகும்.

2.2 அட்டைக்குரிய தனிப்பட்ட அடையாள இலக்கம் (“PIN”) வழமையான தபால் மூலம் அட்டை வைத்திருப்பவருக்கு விநியோகிக்கப்படும். தபாலில் இடப்பட்ட எழுபத்திரண்டு மணித்தியாலங்களுக்குள் அது அவருக்குக் கிடைத்து ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும். கிடைக்கப்பெற்ற PIN இலக்கம் அட்டை வைத்திருப்பவரின் சொத்தாகும். PIN இலக்கம் எப்போதும் பாதுகாப்பாகவும் ஏதேனும் வழியில் தவறவிடப்படாமலும் இருப்பதை அட்டை வைத்திருப்பவர் உறுதிப்படுத்த வேண்டும்.

2.3 முகவரியை மாற்றும்படி அட்டை வைத்திருக்கும் ஒருவர் வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில், வங்கியானது அட்டை, விபரக்கூற்று, PIN என்பவற்றின் விநியோகம் மற்றும்/அல்லது சம்பந்தப்பட்ட கடிதத் தொடர்புகளுக்கு அந்த விநியோக முகவரியையே பயன்படுத்தும்.

2.4 அட்டை மற்றும் PIN ஆகிய இரண்டின் பாவனை மூலமும் மேற்கொள்ளப்படும் சகல கொடுக்கல் வாங்கல்களுக்கும் அட்டை வைத்திருப்பவர் பொறுப்பாளியாகக் கொள்ளப்படுவார். அட்டை வைத்திருப்பவர் மோசடியாகச் செயற்பட்டிருந்தால் அல்லது அட்டையை அல்லது PIN இலக்கத்தைப் பாதுகாக்காமல் அசட்டையாக இருந்திருந்தால் அல்லது அவற்றின் தொலைவு, திருட்டு அல்லது வெளிப்படுத்துகை பற்றி உடனடியாக வங்கிக்கு அறிவிக்காதிருந்தால், அதன் காரணமாக அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்பட்ட சகல தொகைகளுக்கும் எவ்வித வரையறைகளுமின்றி அட்டை வைத்திருப்பவரே முழுப் பொறுப்பாளியாவார். அட்டையை அல்லது PIN இலக்கத்தைப் பாதுகாக்க, காலத்திற்குக் காலம், ஏதேனும் தொடர்பாடல் முறையின் மூலம் வங்கியினால் அட்டை வைத்திருப்பவருக்கு பரிந்துரைக்கப்படும் எவையேனும் நடவடிக்கைகளைப் பின்பற்ற அட்டை வைத்திருப்பவர் தவறியிருந்தால், மேற்குறிப்பிட்ட நோக்கத்திற்காக அது அட்டை வைத்திருப்பவரின் பாரதூரமான கவனயீனம் என்று கருதப்படும்.

2.5 வங்கியானது உங்கள் அட்டை தொடர்பில் கணக்கொன்றைப் பேணும் (இது இனிமேல் சில சமயங்களில் “அட்டைக் கணக்கு” என்று குறிப்பிடப்படும்). அட்டையைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்யப்பட்ட சகல பண்டங்கள் மற்றும் சேவைகள், பெறப்பட்ட ரொக்க முற்பணம் (“அட்டைக் கொடுக்கல் வாங்கல்கள்”) ஆகியவற்றின் பெறுமதி மற்றும் ஏனைய கட்டணங்கள், அறவீடுகள் யாவும் இக் கணக்கில் பற்று வைக்கப்படும். அட்டை வைத்திருப்பவர் ஏதேனும் விற்பனைச் சீட்டில் அல்லது ரொக்க முற்பணப் பத்திரத்தில் கையொப்பமிடத் தவறினாலும், அவை தொடர்பில் வங்கிக்கான எவ்வித பொறுப்பிலிருந்தும் அவர் விடுவிக்கப்பட மாட்டார்.

ATM கொடுக்கல் வாங்கல்களைப் பொறுத்தவரையில், அட்டை வைத்திருப்பவர் கொடுக்கல் வாங்கலுக்கு அதிகாரமளித்துள்ளார் என்பதை நிரூபிக்க, வங்கியின் கணனி அமைப்புக்கள் மற்றும்/அல்லது பதிவேடுகளில் உள்ள தகவல்கள் முடிவான சான்றாக அமையும்.

அட்டை வைத்திருப்பவரினால் அல்லது ஒரு மூன்றாம் தரப்பினால் கொடுக்கல் வாங்கல்(கள்) மேற்கொள்ளப்படிருப்பதாக வங்கி நம்பும் பட்சத்தில், ஏதேனும் சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்(கள்) தொடர்பான பெறுமதியை அட்டை வைத்திருப்பவரிடமிருந்து மீட்பதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது.

2.6 PIN இலக்கத்தின் செயற்படுத்தல் மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலை (உதா. டெலர் இயந்திரம்/தொலைபேசி வங்கிச் சேவை/இணையத்தள வங்கிச் சேவை மூலமான கொடுக்கல் வாங்கல்) பொறுத்தமட்டில், அட்டை வைத்திருப்பவர் கொடுக்கல் வாங்கலுக்கு அதிகாரமளித்துள்ளார் என்பதை நிரூபிக்க, வங்கியின் கணனி அமைப்புக்கள் மற்றும்/அல்லது பதிவேடுகளில் உள்ள தகவல்கள் முடிவான சான்றாக அமையும்.

2.7 அட்டை வைத்திருப்பவரினால் அல்லது ஒரு மூன்றாம் தரப்பினால் கொடுக்கல் வாங்கல்(கள்) மேற்கொள்ளப்படிருப்பதாக வங்கி நம்பும் பட்சத்தில், ஏதேனும் சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்(கள்) தொடர்பான பெறுமதியை அட்டை வைத்திருப்பவரிடமிருந்து மீட்பதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது.

2.8 குறிப்பிட்ட திகதியில் அட்டைக் கணக்கில் நிலுவை இருந்தால் அல்லது கொடுக்கல் வாங்கல் சந்தேகத்திற்கிடமானது என்று காணப்பட்டால், அத்தகைய ஏதேனும் அல்லது சகல அட்டைக் கொடுக்கல் வாங்கல்களையும் நிராகரிக்க வங்கிக்கு உரிமையுண்டு.

2.9 இந்த ஒப்பந்தம் முவுறுத்தல் செய்யப்பட்டாலும் மற்றும்/அல்லது அட்டை மீள ஒப்டைக்கப்பட்டாலும், கடன் அட்டை மூலமாக வங்கியினால் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்கும் அவற்றுடன் தொடர்புடைய சகல அறவீடுகளுக்கும் அட்டை வைத்திருப்பவர் பொறுப்பாளியாவார்.

2.10 வங்கியானது அட்டைக்கென ஒரு கடன் உச்சவரம்பை நிர்ணயிக்கும். இதனை அட்டை வைத்திருப்பவர் கண்டிப்பாக அனுசரிக்க வேண்டும். வங்கியானது இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள முறையில் அல்லது அட்டை வைத்திருப்பவருக்கு

அறிவிப்பதன் மூலம் இந்த உச்சவரம்பைக் காலத்திற்குக் காலம் மாற்ற முடியும். அட்டை வைத்திருப்பவர் தனக்கு ஒதுக்கப்பட்ட கடன் உச்சவரம்பை மீளாய்வு செய்யும்படி கோரி எந்த நேரத்திலும் விண்ணப்பிக்கலாம். வங்கியானது, அட்டை வைத்திருப்பவருக்கு முன்னறிவித்தல் கொடுக்காமலே, காலத்திற்குக் காலம் தனது தனித் தற்றுணிபின் பேரில், இந்த உச்சவரம்பை அதிகரிக்கலாம் (அல்லது குறைக்கலாம்) அல்லது தற்போதுள்ள அட்டையைத் தரமுயர்த்தலாம் (அல்லது தரங்குறைக்கலாம்) அல்லது ஒதுக்கப்பட்ட உச்சவரம்பிற்கு மேலான அட்டைக் கொடுக்கல் வாங்கல்களை அனுமதிக்கலாம். இந்த அட்டை வைத்திருப்பவர் ஒப்பந்தத்திற்கு அமைவாக, தொடர்புடைய சகல கொடுக்கல் வாங்கல்களுக்கும் அட்டை வைத்திருப்பவர் பொறுப்பாளியாவார்.

2.11 எவ்வித சட்டவிரோத நோக்கத்திற்கும் அட்டை பயன்படுத்தப்படலாகாது.

## 3. விலைப்பட்டியலிடல் மற்றும் கொடுப்பனவுகள்

3.1 வழமையாக, ஒவ்வொரு பட்டியலிடல் காலப்பகுதியின் முடிவுத் திகதியிலும் (விபரக்கூற்றுத் திகதி) விபரக்கூற்று ஒன்று அட்டை வைத்திருப்பவருக்கு அனுப்பப்படும். அட்டைக் கணக்கில் நிலுவையாகவுள்ள மொத்தத் தொகை (மொத்த நிலுவை), நடப்புப் பட்டியலிடல் காலப்பகுதிக்கென அட்டை வைத்திருப்பவர் செலுத்த வேண்டிய குறைந்தபட்ச கொடுப்பனவு, கடந்தகால நிலுவை, உச்சவரம்பை மீறிய தொகை, உச்சவரம்பு மீறல் கட்டணம், மொத்த நிலுவை தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய மொத்தக் குறைந்தபட்ச கொடுப்பனவு ("செலுத்தப்பட வேண்டிய குறைந்தபட்சக் கொடுப்பனவு"), வங்கிக்குக் கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய காலக்கெடு ("கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதி") ஆகியவற்றின் விபரங்களை இந்த விபரக்கூற்று கொண்டிருக்கும்.

3.1.1 உச்சவரம்பை மீறிய தொகை, உச்சவரம்பு மீறல் கட்டணம் என்பனவும் முன்னைய விபரக்கூற்றுக் காலப்பகுதியில் (காலப்பகுதிகளில்) செலுத்தப்படாமல் எஞ்சியிருக்கும் ஏதேனும் குறைந்தபட்ச கொடுப்பனவுத் தொகையும் ("கடந்தகால நிலுவை") உடனடியாகச் செலுத்தப்பட வேண்டும். உடனடியாகச் செலுத்தப்பட வேண்டிய இக்

கொடுப்பனவுக் கூறுகள் "கடந்தகால நிலுவைத் தொகை மற்றும் உச்சவரம்பு மீறல் கட்டணம்" என்று காட்டப்படும்.

வங்கிக்குச் செலுத்தப்படும் எந்தவொரு கொடுப்பனவும், வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட முகவரியில் பெறப்பட்டு, அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட பின்பே செல்லுபடியாகும். பணமாகச் செலுத்தப்படும் கொடுப்பனவைச் செயற்படுத்த குறைந்தபட்சம் ஒரு வேலை நாள் தேவைப்படும். காசோலைகள் தேறிய பின்பே அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படும். அட்டை வைத்திருப்பவரின் வேண்டுகோளின் பேரில் அல்லது வங்கியின் தனித் தற்றுணிபிற்கேற்ப விபரக்கூற்றுக் காலப்பகுதிகள் மாற்றப்படலாம்.

3.1.2 ஒப்புக்கொள்ளப்பட்ட குறைந்தபட்ச கொடுப்பனவுகள் உரிய திகதிகளில் செலுத்தப்படாவிட்டால், அட்டையின் பாவனை மறுக்கப்படும்.

3.1.3 அட்டை வைத்திருப்பவரினால் அட்டைக் கணக்கிற்குச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள், வங்கியினால் தீர்மானிக்கப்படும் ஒழுங்கு வரிசையிலேயே அட்டை வைத்திருப்பவரின் வங்கிக்கான பொறுப்புக்களை ஈடுசெய்வதற்குப் பிரயோகிக்கப்படும்.

3.2 விபரக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்குப் பிந்தாமல் மொத்த நிலுவை முழுமையாகச் செலுத்தப்பட வேண்டும். குறிப்பிடப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்கான கொடுப்பனவு வங்கியின் அட்டை நிலையத்திற்குக் கிடைக்குமாயின், அட்டை வைத்திருப்பவர் எவ்வித நிதிக் கட்டணத்தையும் செலுத்த வேண்டியதில்லை.

3.3 அட்டை வைத்திருப்பவர் மொத்த நிலுவையையும் முழுமையாகச் செலுத்த விரும்பாவிட்டால், உரிய கொடுப்பனவுத் திகதியில் அல்லது அதற்கு முன் குறைந்தபட்ச கொடுப்பனவுத் தொகையைச் செலுத்த வேண்டும். குறைந்தபட்ச கொடுப்பனவின் மொத்தத் தொகையில் முன்னைய பட்டியலிடல் காலப்பகுதிகளுக்கான ஏதேனும் செலுத்தப்படாத குறைந்தபட்ச கொடுப்பனவுகளும்

உள்ளடங்கும். வங்கிக்குச் செலுத்தப்படும் எந்தவொரு கொடுப்பனவும், வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட முகவரியில் பெறப்பட்டு, அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட பின்பு மட்டுமே செல்லுபடியாகும்.

3.4 அட்டைக் கணக்கு தொடர்பில் அட்டை வைத்திருப்பவர் வங்கிக்குச் செலுத்தும் கொடுப்பனவுகள், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் வங்கியினால் தீர்மானிக்கப்படும் ஒழுங்கு வரிசையிலேயே அட்டை வைத்திருப்பவரின் வங்கிக்கான பொறுப்புக்களை ஈடுசெய்வதற்குப் பிரயோகிக்கப்படும்.

3.5 அட்டை வைத்திருப்பவரினால் வங்கிக்குச் செலுத்தப்படும் ஏதேனும் கொடுப்பனவு, வங்கியானது அப் பணத்தை உரிய அட்டைக் கணக்கிற்கு அனுப்பிய திகதியிலேயே அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படும். பணமாகச் செலுத்தப்படும் கொடுப்பனவைச் செயற்படுத்த குறைந்தபட்சம் ஒரு வேலை நாள் தேவைப்படும். காசோலைகள் தேறிய பின்பே அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

3.6

(i) அட்டை வைத்திருப்பவர் விரும்பினால் வங்கியிலுள்ள அவரது நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்கில் (தீர்ப்பனவுக் கணக்கு) நேரடிப் பற்றைச் செய்யும்படி நிலையான அறிவுறுத்தல் ஒன்றை விடுக்கலாம்.

(ii) அத்தகைய நிலையான அறிவுறுத்தல்கள் தொடர்பான திருத்தங்கள் மற்றும் இரத்துச்செய்கைகள் அடுத்த கொடுப்பனவுத் திகதிக்குக் குறைந்தபட்சம் இரண்டு வாரங்கள் முன்பதாக வங்கியின் அட்டை நிலையத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும் என்பதை அட்டை வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கிறார்.

வங்கியுடனான தீர்ப்பனவுக் கணக்கிற்கு வழங்கப்பட்ட நேரடிப் பற்று நிலையான அறிவுறுத்தல் சம்பந்தமாக பின்வரும் மேலதிக விதிகள் மற்றும் நிபந்தனைகளும் பிரயோகிக்கப்படும்.

a. சமர்ப்பிக்கப்படும் காசோலைகள் அல்லது வங்கியுடனான வேறேதும் ஏற்பாடுகள் தொடர்பில் அத்தகைய ஏதேனும் நிலையான அறிவுறுத்தல்களின் முன்னுரிமையைத் தீர்மானிக்கும் உரிமை வங்கிக்கு உண்டென்பதை அட்டை வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கிறார்.

b. நிலையான அறிவுறுத்தல்ளை நிறைவேற்றுவதற்குப் போதுமான பணம், கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதிக்கு ஒரு நாள் முன்பதாகவே குறித்துரைக்கப்பட்ட அட்டைத் தீர்ப்பனவுக் கணக்கில் இருப்பதை உறுதிப்படுத்த அட்டை வைத்திருப்பவர் இணங்குகின்றார். தீர்ப்பனவுக் கணக்கில் போதிய பணம் இல்லாவிட்டால், நிலையான அறிவுறுத்தல்களுக்கேற்ப கொடுப்பனவுத் தொகையை மீட்பதற்காக, வங்கியானது காலத்திற்குக் காலம் தனது தற்றுணிபின் பேரில் மேலதிகப் பற்றை வழங்கக்கூடும். வங்கி கோரும்போது, சகல நிலுவைத் தொகைகளையும் வங்கியினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் வீதத்திலான நிதி அறவீடுகளையும் செலுத்த அட்டை வைத்திருப்பவர் பிணிக்கப்பட்டுள்ளார்.

c. கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதியில் தீர்ப்பனவுக் கணக்கில் போதிய பணம் இருக்காவிட்டால், அத் தீர்ப்பனவுக் கணக்கிலுள்ள பணத்தின் அடிப்படையில் மீட்பிற்கான முன்னுரிமையைத் தீர்மானிக்க வங்கி உரிமை கொண்டுள்ளது. அது தொடர்பில் ஏற்படும் நிதி அறவீடுகள் உள்ளிட்ட சகல அறவீடுகளையும் அட்டை வைத்திருப்பவர் செலுத்த வேண்டும். அறிவுறுத்தப்பட்ட தொகை முழுவதையும் மீட்பதற்கு குறித்துரைக்கப்பட்ட தீர்ப்பனவுக் கணக்கில் போதிய பணம் இருக்காவிட்டால், அக் கணக்கில் எஞ்சியுள்ள ஏதேனும் பணத்தை மீட்டுக்கொள்ள வங்கிக்கு உரிமையுண்டு.

3.7 இலங்கை ரூபாய் தவிர்ந்த வேறு நாணயங்களில் மேற்கொள்ளப்பட்ட அட்டைக் கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவு,, வங்கி தீர்மானிக்கும் பிரகாரம், மாற்றப்படும் திகதியில் நடைமுறையிலிருந்த வீதத்தில் மாற்றப்பட்ட பின்பே அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

3.8 ஒரு கொடுக்கல் வாங்கலின் இரத்துச்செய்கை, நேர்மாற்றம் அல்லது மீளளிப்பு காரணமாக ஏதேனும் பரிவர்த்தனை இழப்பு ஏற்படுமாயின் அட்டை வைத்திருப்பவரே அதற்குப் பொறுப்பாளியாவார்.

3.9 இந்த ஒப்பந்தத்திலுள்ள ஏனைய ஏற்பாடுகளுக்கு முரணாகாத விதத்தில், அட்டை வைத்திருப்பவர் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் இலங்கைக்கு வெளியே தங்கியிருக்க விரும்பினால், அட்டைக் கணக்கிற்கான கொடுப்பனவுகள் பற்றித் தெளிவான மற்றும் குறிப்பான அறிவுறுத்தல்கள் வங்கியிடம் விட்டுச்செல்ல வேண்டும். அவர் புறப்படுவதற்கு முன்பே இந்த அறிவுறுத்தலை வங்கியின் அட்டை நிலையத்திற்கு வழங்க வேண்டும்.

3.10 மாதாந்தம் வழங்கப்படும் விபரக்கூற்றை அட்டை வைத்திருப்பவர் பூரணமாகப் பரிசீலனை செய்து, அதில் ஏதேனும் தவறு இருப்பதாகக் கருதினால் விபரக்கூற்றுத் திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் வங்கியின் அட்டை நிலையத்திற்கு அறிவிக்க வேண்டும். அதற்குப் பின்னர், (அறிவிக்கப்பட்ட ஏதேனும் தவறு தவிர) விபரக்கூற்றும் அதிலுள்ள பதிவுகளும் சரியாவை என்று வங்கிக்கும் அட்டை வைத்திருப்பவருக்கும் இடையே முடிவாக ஏற்றுக்கொள்ளப்படும். அச்சிடப்பட்ட விபரக்கூற்றுகள் அனைத்தும் அட்டை வைத்திருப்பவர் வங்கிக்குக் கடைசியாக எழுத்தில் அறிவித்த முகவரிக்கு சாதாரண தபாலில் அனுப்பப்படும் என்பதுடன், அவ்வாறு தபாலில் இடப்பட்ட 48 மணிநேரத்தினுள் கிடைத்துவிட்டதாகவும் கருதப்படும்.

3.11 இந்த ஒப்பந்தத்திலுள்ள ஏனைய ஏற்பாடுகளுக்கு முரணாகாத விதத்தில், அட்டை வைத்திருப்பவர் குடிபெயர்வு அல்லது தொழில் நிமித்தம் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் இலங்கைக்கு வெளியே தங்க வேண்டியிருந்தால், வதியாதோர் வெளிநாட்டுக் கணக்கொன்றின் (NRFC) ஊடாக அட்டைக் கணக்கைத் தீர்ப்பனவு செய்வது பற்றித் தெளிவான மற்றும் குறிப்பான அறிவுறுத்தல்ளை வங்கியிடம் விட்டுச்செல்ல வேண்டும். அவர் புறப்படுவதற்கு முன்பே இந்த அறிவுறுத்தலை வங்கியின் அட்டை நிலையத்திற்கு வழங்க வேண்டும்.

a. மாதாந்த விபரக்கூற்று பெறப்படாமை, கொடுப்பனவைச் செலுத்தாமல் விடுவதற்கு ஒரு செல்லுபடியான காரணமாகக் கருதப்பட மாட்டாது. (விபரக்கூற்று உருவாக்கப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு (14) தினங்களுக்குள் அல்லது ஒரு புதிய அட்டையெனின் அந்த அட்டை அங்கீகரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு (14) தினங்களுக்குள் விபரக்கூற்று கிடைக்காவிட்டால், அட்டை வைத்திருப்பவர் வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.)

## 4. கட்டணங்கள் மற்றும் அறவீடுகள்

4.1 புதிய அட்டைக்காக சேர்வுக் கட்டணம், வருடாந்தக் கட்டணம் என்பவற்றை வங்கிக்குச் செலுத்த அட்டை வைத்திருப்பவர் இணங்குகின்றார். இக் கட்டணங்கள் வங்கியின் நடப்பிலுள்ள விதிப்பனவுகள் பட்டியலுக்கு அமைய உரிய வேளையில் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும். கட்டணங்களை எந்த நேரத்திலும் மாற்றுவதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது.

4.2 அட்டையானது அனுப்பீட்டுச் சேவை (Courier) மூலம் வெளிநாட்டு முகவரி ஒன்றிற்கு அனுப்பப்படும்போது, வங்கியினால் தீர்மானிக்கப்படும் வீதத்தில், கையாளுகைக் கட்டணம் ஒன்று அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

4.3 உச்சவரம்பை அதிகரிப்பதற்காக, வங்கியினால் தீர்மானிக்கப்படும் வீதத்தில், கையாளுகைக் கட்டணம் ஒன்று அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

4.4 அட்டை விபரக்கூற்றின் நகல் பிரதிகளை வழங்குவதற்கு, வங்கியினால் தீர்மானிக்கப்படும் வீதத்தில், கையாளுகைக் கட்டணம் ஒன்று அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

4.5 அட்டை வைத்திருப்பவர் உரிய கொடுப்பனவுத் திகதியில் மொத்த நிலுவையையும் செலுத்தாவிட்டால், விபரக்கூற்றில் காட்டப்படும் மொத்த நிலுவைக்கு நிதி அறவீடு ஒன்று விதிக்கப்படும். கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற திகதியிலிருந்து பட்டியலிடல் காலப்பகுதி முழுவதிலும் தினசரி மீதி அடிப்படையில் வங்கியினால்

தீர்மானிக்கப்படும் வீதத்தில் இது கணிக்கப்படும். இந்த நிதி அறவீடு விபரக்கூற்றுத் திகதியில் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

4.6 அட்டை வைத்திருப்பவர் உரிய கொடுப்பனவுத் திகதிக்குள் குறைந்தபட்ச தொகையையாவது செலுத்தத் தவறினால், மேலே 4.5இல் தெரிவிக்கப்பட்டுள்ள நிதி அறவீட்டின் கொடுப்பனவுக்கு மேலதிகமாக, வங்கியினால் தீர்மானிக்கப்படும் வீதத்தில் தாமதக் கட்டணம் ஒன்று விதிக்கப்பட்டு அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

4.7 அட்டை வைத்திருப்பவரினால் அல்லது வேறொரு தரப்பினால் வங்கிக்கு வழங்கப்பட்ட அல்லது சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் காசோலை அல்லது வேறேதும் கொடுப்பனவுக் கட்டளை ஏதேனும் காரணத்திற்காக நிராகரிக்கப்பட்டால், வங்கியானது அதனால் தீர்மானிக்கப்படும் வீதத்தில் கையாளுகைக் கட்டணம் ஒன்றை விதித்து அதனை அட்டைக் கணக்கில் பற்று வைக்கும்.

4.8 சகல ரொக்க முற்பணங்கள் தொடாபாகவும் ஒரு ரொக்க முற்பணக் கட்டணம் மற்றும்/அல்லது ஒரு கையாளுகைக் கட்டணம், வங்கியினால் தீர்மானிக்கப்படும் வீதத்தில் விதிக்கப்பட்டு, அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும். உடனடியாகவே பணமாக மாற்றக்கூடிய பயணத்தர் காசோலைகள், கோரல் வரைவுகள், தந்திப் பரிமாற்றப் பத்திரங்கள் போன்ற ஏதேனும் பத்திரங்கள் அட்டையைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்யப்பட்டால், அவையும் ரொக்க முற்பணங்களாகக் கருதப்பட்டு மேற்குறிப்பிட்ட கட்டணங்களுக்கு உள்ளாக்கப்படும்.

4.9 பட்டியலிடும் காலப்பகுதிக்குள் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில், குறித்தொதுக்கப்பட்ட கடன் உச்சவரம்பு மீறப்படுமாயின், உச்சவரம்பு மீறல் கட்டணம் ஒன்று வங்கியினால் தீர்மானிக்கப்படும் வீதத்தில் விதிக்கப்பட்டு அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

4.10 இலங்கையிலுள்ள பெற்றோல் நிலையங்களில் அட்டையைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்யப்படும் பெற்றோல், டீசல், எரிவாயு மற்றும் சகல பொருள்களும் கையாளுகைக் கட்டணம் ஒன்றிற்கு உட்படுத்தப்படும். இக் கட்டணம் வங்கியினால் தீர்மானிக்கப்படும் வீதத்தில் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

4.11 இலங்கை தவிர்ந்த இன்னுமொரு நாட்டில் 2016 ஜனவரி 01ஆம் திகதிக்குப் பின் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு அட்டைக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாகவும், கொடுக்கல் வாங்கல் நேரத்தில் அட்டை இருந்ததோ இல்லையோ என்பதைக் கருதாமல், முத்திரைக் கட்டணம் விதிக்கப்படும். இது ஒரு சட்டபூர்வ அறவீடாகும். அட்டை வைத்திருப்பவருக்கு முன்னறிவித்தல் கொடுக்காமலே இது காலத்திற்குக் காலம் மாற்றப்படலாம்.

## 5. மேலதிக அட்டைகள் மற்றும்/அல்லது துணை அட்டைகள்

அட்டையைப் பெற விரும்புபவரும் மேலதிக/துணை அட்டையைப் பெற விரும்புபவரும் கூட்டாக எழுத்துமூல வேண்டுகோளை விடுக்கும் பட்சத்தில், வங்கியானது அதன் தற்றுணிபிற்கேற்ப அவற்றை வழங்க முடியும். அட்டை வைத்திருப்பவர், மேலதிக/துணை அட்டை வைத்திருப்பவர்கள் ஆகியோரின் அட்டைக் கணக்குகள் கூட்டாக இருந்தாலும் தனித்தனியாக இருந்தாலும், அட்டை மற்றும் மேலதிக/துணை அட்டைகளின் பாவனைக்கு அவர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாவார்கள். எவரேனுமொரு மற்றும்/ அல்லது ஒவ்வொரு மேலதிக/துணை அட்டை வைத்திருப்பவரும் இந்த ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் பிணிக்கப்படுவார்கள்.

ஏதேனும் சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, அட்டைப் பாவனை தொடர்பில் அட்டை வைத்திருப்பவர் மற்றும் மேலதிக/துணை அட்டை வைத்திருப்பவர்களின் கூட்டு மற்றும் தனித்தனிப் பொறுப்புகளுக்கு மேலதிகமாக, அட்டை வைத்திருப்பவரினாலும் மேலதிக/துணை அட்டை வைத்திருப்பவர்களினாலும் உறப்படும் சகல பொறுப்புக்களுக்கும் அட்டை வைத்திருப்பவரே இறுதிப் பொறுப்பாளியாக் கொள்ளப்படுவார்.

## 6. ATM இயந்திரங்களின் பாவனை மற்றும் PIN

தன்னியக்க டெலர் இயந்திர (“ATM”) அணுகல் வசதி ஒரு கடன் அட்டையில் உள்ளடக்கப்பட்டிருந்தால், ATMகள், விற்பனையிட முனைகள் (POS) அல்லது அது போன்ற இடங்களில் இலத்திரனியல் முறையில் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்கு அக் கடன் அட்டையைப் பயன்படுத்தலாம். இவ் வசதியின் பயன்பாடானது, இந்த ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மட்டுமன்றி, வங்கியின் ATM அட்டைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் (இதன் பிரதியொன்றை வங்கியின் கிளையொன்றில் கேட்டுப் பெறலாம்) உட்படும்.

ATMகள், தொலைபேசி மற்றும் இணையத்தள வங்கிச் சேவை ஊடாக அட்டை வைத்திருப்பவர் மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் எவையேனும் சர்ச்சைகள் ஏற்படுமாயின், வங்கி அவற்றை விசாரிக்கும். வங்கிக்குத் திருப்தியளிக்கும் வகையில் வேறு விதமாக நிரூபிக்கப்பட்டாலன்றி, மேற்குறிப்பிட்ட ஒரு வழியில் செய்யப்பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான பொறுப்பு தொடர்ந்தும் அட்டை வைத்திருப்பவரையே சார்ந்திருக்கும். இங்கு அடங்கியுள்ள ஏதாவது வேறு விதமாக இருந்தால்கூட, ATM கொடுக்கல் வாங்கல்களுக்கு PIN இலக்கமும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதால், அட்டை தொலைந்துவிட்டதென்ற அறிவித்தலின் காரணமாக இப் பொறுப்பு இடைநிறுத்தப்படவோ இரத்துச்செய்யப்படவோ மாட்டாது. PIN இலக்கத்தை முற்றிலும் பாதுகாப்பாகவும் அட்டையிலிருந்து விலக்கியும் வைக்கும்படி அட்டை வைத்திருப்பவர்களுக்குக் குறிப்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. அட்டை வைத்திருப்பவர் அவ்வாறு செய்யத் தவறுதல், அதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதேனும் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார் என்றே கருதப்படும்.

## 7. முடிவுறுத்தல்

7.1 அட்டை வைத்திருப்பவர் மற்றும் மேலதிக/துணை அட்டை வைத்திருப்பவர் (எவரேனும் இருப்பின்) எந்த நேரத்திலும் வங்கிக்கு எழுத்தில் அறிவிப்பதுடன் அட்டையை மற்றும் எவையேனும் மேலதிக/துணை அட்டைகளை இரு

துண்டுகளாகக் கிழித்து வங்கிக்கு மீள அனுப்புவதன் மூலம் இந்த ஒப்பந்தத்தை முடிவுறுத்த முடியும்.

7.2 வங்கியானது முன்னறிவித்தல் கொடுத்தோ கொடுக்காமலோ, காரணம் காட்டியோ காட்டாமலோ எந்த நேரத்திலும் தனது தனித் தற்றுணிபிற்கேற்ப அட்டையை இரத்துச்செய்வதன் மூலம் அல்லது புதுப்பிக்க மறுப்பதன் மூலம் இந்த ஒப்பந்தத்தை முடிவுறுத்த முடியும். அத்தகைய முடிவுறுத்தல் நடைமுறைக்கு வருமட்டும், வங்கியானது காலத்திற்குக் காலம் அட்டை வைத்திருப்பவருக்கு ஒரு புதிய அட்டையை (புதுப்பித்தல் அட்டை) வழங்கக்கூடும்.

7.3 இந்த ஒப்பந்தம் முடிவுறுத்தப்படும் பட்சத்தில் அல்லது அட்டை வைத்திருப்பவர் வங்குரோத்து நிலை அடையும் பட்சத்தில் அல்லது அவர் மரணிக்கும் பட்சத்தில், அட்டைக் கணக்கிலுள்ள மொத்த நிலுவைத் தொகை, ஏற்கனவே கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்டு அட்டைக் கணக்கில் இன்னமும் அறவிடப்படாதிருக்கும் தொகை என்பன உடனடியாகவும் முழுமையாகவும் வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டும். அட்டைக் கணக்கில் நிலுவையாகவுள்ள தொகைகளைச் செலுத்தி முடிப்பது அட்டை வைத்திருப்பவரின் அல்லது அவரது வாரிசுகளின் பொறுப்பு என்பதுடன், அத்தகைய நிலுவைகளை மீட்பது தொடர்பில் வங்கியினால் உறப்படும் கிரயங்கள், அறவீடுகள் (சட்டக் கட்டணங்களும் உட்படும்) மற்றும் வங்கிக்கு ஏற்படும் செலவுகள் அனைத்திற்கும் எதிராக அவர்கள் வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்கவும் வேண்டும். அத்தகைய கணக்கின் மொத்த நிலுவையும் செலுத்தப்படும் வரை, வங்கியானது அதன் நடப்பு வீதங்களில் நிதி அறவீடுகளையும் ஏனைய கட்டணங்கள் மற்றும் அறவீடுகளையும் தொடர்ந்து அறவிடும்.

7.4 இந்த ஒப்பந்தம் எத் தரப்பினால் முடிவுறுத்தப்பட்டாலும், அவ்வாறு முடிவுறுத்தப்பட்ட நேரத்தில் அட்டைக் கணக்கில் நிலுவையாகவிருந்த மொத்தத் தொகைக்கும் (வட்டி, வரிகள் மற்றும் அறவீடுகளும் இதில் உட்படும்) அட்டையின் பவைனை மூலம் உறப்பட்ட சகல மேலதிக அறவீடுகளுக்கும் அட்டை வைத்திருப்பவரே தொடர்ந்து பொறுப்பாளியாக இருப்பார்.

## 8. அட்டையின் தொலைவு

8.1 அட்டை தொலைந்தால் அல்லது திருட்டுப்போனால், அது பற்றித் தெரியவந்த உடனேயே தொலைபேசி, தொலைநகல் அல்லது ரெலெக்ஸ் மூலம் வங்கியின் அட்டை நிலையத்திற்கும் எழுத்து மூலம் பொலிசுக்கும் (அல்லது வெளிநாடெனின் வீசா கார்ட் அங்கத்தவர் ஒருவருக்கு) அறிவிக்க வேண்டும். எவ்வாறிருப்பினும், தொலைபேசி, தொலைநகல் அல்லது ரெலெக்ஸ் மூலம் வழங்கப்பட்ட அறிவித்தல் அட்டை வைத்திருப்பவரினால் அல்லது அவரது சட்டத்தரணியினால் எழுத்து மூலம் ஊர்ஜிதம் செய்யப்படுவது அவசியமாகும். அட்டையின் தொலைவு அல்லது திருட்டு பற்றி வங்கிக்கு அல்லது வீசா கார்ட் அங்கத்தவரொருவருக்கு அறிவிக்கப்பட்டு, அதன் பின்னர் எழுத்து மூலம் ஊர்ஜிதம் செய்யப்படும் வரை அட்டையின் அனுமதியற்ற பாவனையின் விளைவாக அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்பட்ட சகல தொகைகளுக்கும் அட்டை வைத்திருப்பவர் பொறுப்பாளியாவார். தொலைந்த அல்லது திருட்டுப்போன அட்டை(கள்) மீண்டும் கிடைத்துவிட்டால். அட்டை வைத்திருப்பவர் அதனை (அவற்றை) உடனடியாக வங்கிக்கு மீளளிக்க வேண்டும்.

8.2 அட்டையின் தொலைவு, களவு அல்லது துஷ்பிரயோகம் சம்பந்தமாக தன்னிடமுள்ள சகல தகவல்களையும் அட்டை வைத்திருப்பவர் வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும். வங்கி வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில், இழந்த அட்டையை மீளப் பெறுவதற்கு அவசியமெனக் கருதப்படும் சகல நடவடிக்கைகளையும் அவர் எடுக்க வேண்டும்.

8.3 அட்டை தொலைந்தால் அல்லது திருட்டுப்போனால் அட்டை வைப்பாளருக்கு பதிலீட்டு அட்டையொன்றை வழங்க வேண்டும் என்ற கடப்பாடு எதுவும் வங்கிக்குக் கிடையாது. ஏதேனும் பதிலீட்டு அட்டை வழங்கப்பட்டால் அதற்கெனக் கையாளுகைக் கட்டணம் ஒன்று வங்கி தீர்மானிக்கும் வீதத்தில் விதிக்கப்பட்டு, அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும். மூல அட்டைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே பதிலீட்டு அட்டையும் வழங்கப்படும்.

## 9. பொது

9.1 குறித்தொதுக்கப்பட்ட கடன் உச்சவரம்பை மீறுவதற்கு வங்கியிடமிருந்து எழுத்துமூல முன்னனுமதி பெறப்படாவிட்டால், உச்சவரம்பிற்குள் மட்டும் செயற்பட அட்டை வைத்திருப்பவர் பொறுப்பேற்க வேண்டும். மொத்த நிலுவையானது கடன் உச்சவரம்பை மீறக்கூடிய விதத்தில் எவ்வித கொடுக்கல் வாங்கலும் செய்யப்படாதிருப்பதையும் அவர் உறுதிப்படுத்த வேண்டும்.

9.2 அட்டை வைத்திருப்பவர் தனது தொழிலில் மற்றும்/அல்லது அலுவலக அல்லது வசிப்பிட முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கங்களில் ஏதேனும் மாற்றம் ஏற்படின் அதனை உடனடியாக எழுத்து மூலம் வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

9.3 அட்டை வைத்திருப்பவருக்கான தபால்மூல அறிவித்தல்கள் அல்லது கடிதங்கள் யாவும் அட்டை வைத்திருப்பவரினால் வங்கிக்கு எழுத்து மூலம் கடைசியாக வழங்கப்பட்ட முகவரிக்கே அனுப்பப்படும் என்பதுடன், தபாலிலிடப்பட்ட 48 மணிநேரத்திற்குள் கிடைத்துவிட்டதாகவும் கருதப்படும்.

9.4 வங்கியினால் கோரப்படும் சந்தர்ப்பத்தில், அட்டை வைத்திருப்பவர் தனது நிதி நிலைமை பற்றிய தகவல்களை வங்கிக்கு வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்ட தகவல்களை ஊர்ஜிதம்செய்ய அட்டை வைத்திருப்பவர் வங்கிக்கு அதிகாரமளிக்கிறார். கோரப்படும் வேளையில் தகவல்கள் வழங்கப்படாவிட்டால், வங்கியானது தனது தற்றுணிபின் பேரில் அட்டையைப் புதுப்பிக்க மறுக்கலாம் அல்லது அதனை உடனடியாக இரத்துச்செய்துவிடலாம்.

9.5 வங்கிக்குக் கிடைத்த சான்றுகளின் (அட்டை வைத்திருப்பவரினால் அல்லது வேறு வழியில் வழங்கப்பட்டவை) அடிப்படையில், அட்டை வைத்திருப்பவர் தனது அட்டைக் கணக்கு அல்லது அட்டையைக் கையாளுவதில் மிகவும் கவனயீனமான அல்லது மோசடியான முறையில் நடந்திருக்கிறார் (அட்டை, கணக்கு அல்லது இலக்கத்தைப் பாதுகாக்கத் தவறியமை, அட்டையின் இழப்பை அறிவிக்கத் தவறியமை அல்லது அட்டையின் மூலமான அனுமதியற்ற கொடுக்கல் வாங்கல்களுக்கு இடமளித்தமை என்பனவும் இதில் உள்ளடங்கும்) என்று வங்கி

கருதுமாயின், அட்டையின் மூலமான ஏதேனும் அனுமதியற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் அட்டை வைத்திருப்பவரின் பொறுப்புக்கள் அதிகரிக்கப்படும். குறிப்பான புலன்விசாணை அவசியமென வங்கி தீர்மானிக்குமாயின் (அட்டையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வணிகர் வகைகள் இதில் உள்ளடங்கும்) அல்லது அட்டை வைத்திருப்பவரின் கணக்கு வரலாறு திருப்தி அற்றதென அல்லது கொடுக்கல் வாங்கலின் தன்மை அட்டை வைத்திருப்பவருக்கான மீளளிப்பை நியாயப்படுத்தவில்லையென வங்கி காணும் பட்சத்தில் எவையேனும் சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்களுக்காக வங்கியானது அட்டை வைத்திருப்பவருக்கு எவ்வித மீளளிப்பும் செய்ய மாட்டாதென்பதை அட்டை வைத்திருப்பவர் இணங்கி ஏற்றுக்கொள்கிறார்.

9.6 பங்குபற்றுநர்கள் தமது அட்டையைப் பயன்படுத்திப் பணத்தை அல்லது பணப் பெறுமதியைப் பங்களிப்புச் செய்ய அல்லது செலுத்த வேண்டியிருக்கும் மற்றும் பங்குபற்றுநர்களுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் பின்வருவனவற்றில் பெருமளவு தங்கியிருக்கும் ஏதேனுமொரு திட்டத்தை முன்வைக்கும், ஊக்குவிக்கும், விளம்பரப்படுத்தும், நிர்வகிக்கும் அல்லது நெறிப்படுத்தும் எவ்வித நடவடிக்கையிலும் அட்டை வைத்திருப்பவர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபடக் கூடாது.

(a) திட்டத்தில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கையை அதிகரித்தல்; அல்லது

(b) பங்குபற்றுபவர்கள் திட்டத்திற்கு வழங்கும் பங்களிப்பை அதிகரித்தல்;

வங்கியானது அட்டை வைத்திருப்பவரின் அட்டைக் கணக்கில் தவறுதலாக வரவு வைக்குமானால், எந்த நேரத்திலும் அப் பதிவை நேர்மாற்றம் செய்ய மற்றும்/அல்லது சம்பந்தப்பட்ட தொகையை அட்டை வைத்திருப்பவரிடமிருந்து மீட்டுக்கொள்ள வங்கிக்கு உரிமையுண்டு.

## 10. தொலைபேசி, டெலெக்ஸ், தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் அறிவுறுத்தல்களுக்கான அதிகாரமளிப்பும் இழப்பெதிர்காப்பும்

10.1 அட்டை வைத்திருப்பவரினால் அல்லது அவரின் சார்பில் இன்னுமொருவரினால் தொலைபேசி, டெலெக்ஸ், தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் அல்லது வழங்கப்பட்டதாகக் கூறப்படும் எவையேனும் அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், கோரிக்கைகள் அல்லது வேறேதும் தொடர்பாடல்கள் ("அறிவுறுத்தல்கள்") சம்பந்தமாக, அத்தகைய அறிவுறுத்தல்களை வழங்கிய அல்லது வழங்கியதாகக் கூறப்படும் ஆளின் அதிகாரத்தை அல்லது அடையாளம் உள்ளிட்ட விபரங்களை விசாரிக்காமலும் அத்தகைய அறிவுறுத்தல்கள் பெறப்பட்ட நேரத்திலிருந்த சூழ்நிலையைக் கருதாமலும், அவற்றில் நம்பிக்கை வைத்துச் செயற்பட அட்டை வைத்திருப்பவர் வங்கிக்கு அதிகாரமளிக்கிறார். அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெற்ற நேரம்/திகதி பற்றிய வங்கியின் தீர்ப்பை அட்டை வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

10.2 அட்டை வைத்திருப்பவரிடமிருந்து கிடைக்கும் அத்தகைய அறிவுறுத்தல்களை பூரணமாக அதிகாரமளிக்கப்பட்டவையாகவும் அட்டை வைத்திருப்பவரைப் பிணிப்பவையாகவும் கருத வங்கிக்கு உரிமையுண்டு. அத்தகைய அறிவுறுத்தல்கள் தொடர்பில் அல்லது அவற்றில் தங்கியிருந்து, பொருத்தமெனக் கருதும் முறையில் நடவடிக்கைகளை எடுக்கவும் வங்கி உரிமை கொண்டுள்ளது. அத்தகைய அறிவுறுத்தல்கள் பணம் செலுத்துதல் அல்லது வேறு வழியில் அட்டை வைத்திருப்பவரின் பெயரிலுள்ள ஏதேனும் கணக்கில் பற்று வைத்தல் அல்லது ஏதேனும் கணக்கில் வரவு வைத்தல் தொடர்பானவையாக அல்லது ஏதேனும் பணத்தை அல்லது ஆவணங்களை அகற்றுதல் தொடர்பானவையாக அல்லது அட்டை வைத்திருப்பவரை வங்கியுடனான அல்லது வேறொரு நபருடனான ஏதேனும் ஒப்பந்தத்துடன் அல்லது வேறு ஏற்பாட்டுடன் பிணிப்பவையாக அல்லது வேறேதும் வகையிலான கொடுக்கல் வாங்கலுக்கு (அக் கொடுக்கல் வாங்கல் அல்லது ஏற்பாட்டின் தன்மை அல்லது சம்பந்தப்பட்ட பணத் தொகையைக் கருதாமலும் அறிவுறுத்தல்களின் விதிகளில் தவறு, மயக்கம், தப்பபிப்பிராயம்,

தெளிவற்ற தன்மை எவ்வாறிருப்பினும்) அட்டை வைத்திருப்பவரை இணங்கச் செய்பவையாக இருக்கலாம்.

10.3 இந்த அதிகாரமளிப்பு மற்றும் இழப்பெதிர்காப்பு விதிகளுக்கு அமைவாக வங்கி செயற்படுகின்ற காரணத்தினால், அத்தகைய அறிவுறுத்தல்களின் விளைவாக அல்லது அவை தொடர்பில் ஏதேனும் வழியில் வங்கி உறக்கூடிய, எதிர்நோக்கக்கூடிய அல்லது வங்கிக்கு ஏற்படக்கூடிய இழப்புகள், உரிமைக்கோரல்கள், சட்ட நடவடிக்கைகள், வழக்குகள், கோரிக்கைகள், சேதங்கள், கிரயங்கள் மற்றும் செலவுகள் அனைத்திற்கும் எதிராக வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்கவும் அதனைத் தொடர்ந்து பேணவும் அட்டை வைத்திருப்பவர் மறுப்பிற்கிடமின்றி உடன்படுகின்றார்.

10.4 அட்டை வைத்திருப்பவரிடமிருந்து ஒப்பந்த முடிவுறுத்தல் பற்றிய அறிவித்தல் கிடைக்கப்பெற்று, அதன் மீது செயற்பட நியாயமான கால அவகாசம் வழங்கப்படும் வரை, இந்த அதிகாரமளிப்பு மற்றும் இழப்பெதிர்காப்பு விதிகள் பூரணமாக நடைமுறையிலிருக்கும். அதே சமயத்தில், ஒப்பந்தம் அவ்வாறு முடிவுறுத்தல் செய்யப்பட்டாலும், அத்தகைய அறிவுறுத்தல்கள் காலாவதியாவதற்கு முன்னர் இந்த அதிகாரமளிப்பு மற்றும் இழப்பெதிர்காப்பு விதிகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் நடவடிக்கை தொடர்பில் இந்த அதிகாரமளிப்பு மற்றும் இழப்பெதிர்காப்பின் கீழான பொறுப்புக்களிலிருந்து அட்டை வைத்திருப்பவர் விடுவிக்கப்பட மாட்டார்.

## 11. விலக்களிப்பு மற்றும் தவிர்ப்பு

11.1 எந்தவொரு வணிகரோ அல்லது நிறுவனமோ அட்டைக்கு மதிப்பளிக்க அல்லது அதனை ஏற்றுக்கொள்ள மறுத்தால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முழு உச்சவரம்புத் தொகைக்குக் கடன் வசதியை வழங்க மறுத்தால் மற்றும், ரொக்க முற்பணத்தைப் பொறுத்த வரையில், அதிகாரமளிக்கப்பட்ட முழு ரொக்க முற்பணத் தொகையை வழங்க மறுத்தால், வங்கி அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளாது.

11.2 அட்டையை அல்லது அட்டை இலக்கத்தைப் பயன்படுத்திப் பெறப்படும் அல்லது கொள்வனவு செய்யப்படும் பண்டங்கள் மற்றும்/அல்லது சேவைகளின் ஏதேனும் குறைபாடு அல்லது பற்றாக்குறைக்கு வங்கி பொறுப்பாளியாகாது. பொதுமக்களுக்கான விற்பனைக்கு அல்லது நுகர்விற்கென முன்'வைக்கப்படும் பண்டங்கள் மற்றும்/அல்லது சேவைகள் தொடர்பான ஏதேனும் விளம்பரங்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள். வெளியீடுகள், அஞ்சற் கட்டளைப் படிவங்கள், விபரக்கொத்துகள் அல்லது வேறேதும் ஆவணங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள அல்லது அடங்கியுள்ள அறிக்கைகள். வார்த்தைகள், படங்கள் அல்லது ஏதேனும் வேறு விபரிப்புக்களுக்கு வங்கி பொறுப்பாளியாகாது. அட்டை வைத்திருப்பவர் வணிகருக்கு எதிரான தனது முறைப்பாடுகளை சம்பந்தப்பட்ட வணிகருக்கு அல்லது நிறுவனத்திற்கே சமர்ப்பிக்க வேண்டும். அட்டை வைத்திருப்பவர் வணிகருக்கு அல்லது நிறுவனத்திற்கு எதிராக எத்தகைய உரிமைக்கோரலை விடுத்திருந்தாலும், இவ் விடயத்தில் வங்கிக்கான எந்தக் கடப்பாட்டிலிருந்தும் அவர் விடுவிக்கப்பட மாட்டார்.

11.3 எதேனும் ATM இயந்திரத்தின் அல்லது தொடர்பாடல் அமைப்பின் அல்லது வசதிகளின் அல்லது தரவு செயற்படுத்தல் அமைப்புக்களின் அல்லது அனுப்பீட்டு இணைப்பின் சீர்குலைவு, செயலிழப்பு அல்லது கோளாறு காரணமாக அல்லது விளைவாக அல்லது ஏதேனும் கைத்தொழில் அல்லது வேறு பிணக்கு அல்லது வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட அல்லது வேறு வழியிலான ஏதேனும் நிலைமை காரணமாக அல்லது அட்டை வைத்திருப்பவரின் அட்டைக் கணக்கில் வரவு வைப்பதற்கான கொடுப்பனவுகளைச் செய்வதற்கு வங்கியை அல்லது வேறேதும் சேவை ஸ்தானத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக அட்டை வைத்திருப்பவருக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் அசௌகரியம், இழப்பு அல்லது சங்கடத்திற்கு வங்கி எவ்விதத்திலும் பொறுப்பாளியாகாது.

11.4 வங்கியானது ஒவ்வொரு மாதமும் விபரக்கூற்றுத் திகதியாக ஒரு திகதியையும் கடன் அட்டைக் கொடுப்னவு செலுத்தப்பட வேண்டிய திகதியாக ஒரு திகதியையும் தெரிவு செய்யும். வங்கியானது மாதாந்த அடிப்படையில் விபரக்கூற்றை

விநியோகிக்கத் தவறினாலும் நிதி அறவீடு உள்ளிட்ட கொடுப்பனவுகளை உரிய நேரத்தில் செலுத்துவது அட்டை வைத்திருப்பவரின் பொறுப்பாகும்.

11.5 அட்டையில் முறைப்படி பூர்த்தி செய்யப்பட்ட அச்சுப்பதிவு செய்யப்பட்ட, அல்லது உருப்பதிக்கப்பட்ட அல்லது மறைகுறியிடப்பட்ட தகவல்ளைக் கொடுக்கல் வாங்கல் பதிவு, கடன் வவுச்சர், பண வழங்கல் வரைவு மற்றும்/அல்லது வேறு அறவீட்டுப் பதிவு என்ற வகையில் ஏதேனும் விற்பனை வரைவிற்கு மதிப்பளிக்க வங்கி உரிமை கொண்டுள்ளது.

11.6 வங்கியிடமுள்ள பதிவேடுகளும் விற்பனைச் சீட்டுகளும் சகல கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரக்கூற்றுக்களும் முடிவானவை என்பதையும் எல்லா நோக்கங்களுக்காகவும் அட்டை வைத்திருப்பவரைப் பிணிப்பவை என்பதையும் அட்டை வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கிறார்.

11.7 வங்கியின் விபரக்கொத்துகள், அறிக்கைகள் அல்லது வெளியீடுகளில் விளம்பரதாரர்களினால் வழங்கப்படும் சேவைகள், பொருள்கள் அல்லது அனுகூலங்கள் காரணமாக ஏதோ வழியில் எழக்கூடிய ஏதேனும் வகையிலான உரிமைக்கோரல்கள் எதற்கும் அட்டை வைத்திருப்பவர் வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது.

11.8 அட்டைக் கணக்கில் பணம் இருந்தாலும், வங்கி சரியானதெனக் கருதும் பட்சத்தில், எந்தவொரு கொடுக்கல் வாங்கலையும் நிராகரிப்பதற்கு உரிமை கொண்டுள்ளது.

11.9 மீளவரும் கொடுக்கல் வாங்கல்களெனின், அக் கொடுக்கல் வாங்கல்கள் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படுவதைத் தடுக்க அட்டை வைத்திருப்பவர் அவற்றை இரத்துச்செய்ய வேண்டும் மற்றும்/அல்லது வணிகரின் புதுப்பித்தல் கொள்கைகளை அனுசரிக்க வேண்டும்.

அட்டை வைத்திருப்பவரினால் வணிகருக்கு/ நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன் அட்டை இலக்கம், காலாவதித் திகதி, தனிப்பட்ட விபரங்கள் முதலிய தகவல்களில் ஏதேனும் மாற்றம் ஏற்படின், அந்த மாற்றத்தை வணிகருக்கு/ நிறுவனத்திற்கு அறிவிப்பதன் மூலம்

மீளவரும் கொடுக்கல் வாங்கல்/நிலையான அறிவுறுத்தல் எவ்வித இடையீடுமின்றித் தொடர்வதை உறுதிப்படுத்த முடியும். முன்சொன்னவாறு வணிகருக்கு/ நிறுவனத்திற்கு அறிவிக்க அட்டை வைத்திருப்பவர் தவறுவதால் ஏற்படக்கூடிய ஏதேனும் விளைவுகளுக்கு வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது.

## 12. சட்ட நடவடிக்கை

ஏதேனும் காரணத்திற்காக, அட்டை வைத்திருப்பவர் இந்த ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகத் தவறினால், வங்கியானது இந்த ஒப்பந்தத்தை முடிவுறுத்திவிட்டு இதன் கீழ் வருமதியாகவுள்ள சகல தொகைகளையும் மீட்டுக்கொள்ள முடியும். இது தொடர்பில் பூரண இழப்பெதிர்காப்பு அடிப்படையில் வங்கிக்கு ஏற்படக்கூடிய சட்டச் செலவுகள் உள்ளடங்கலான செலவுகள். கிரயங்கள் மற்றும் அறவீடுகள் அனைத்திற்கும் அட்டை வைத்திருப்பவரே பொறுப்பாளியாவார்.

## 13. பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுப் பிரமாணம்

13.1 அட்டையானது எல்லாவேளைகளிலும் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கும், இலங்கை மத்திய வங்கி மற்றும் அதன் கீழுள்ள ஏனைய ஒழுங்குபடுத்தும் அமைப்புக்களின் பணிப்புரைகள், பிரமாணங்கள், செயற்பாட்டு அறிவுறுத்தல்கள் என்பவற்றிற்கும் அமைவாகவே பயன்படுத்தப்படுவதை அட்டை வைத்திருப்பவர் உறுதிப்படுத்த வேண்டும் ("பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுச் சட்டம்").

13.2 அட்டை வைத்திருப்பவர் தனது கடன் அட்டையை வெளிநாட்டில் பின்வருவன தொடர்பான தனிப்பட்ட தேவைகளுக்காக மட்டுமே பயன்படுத்த முடியும். வெளிநாட்டுப் பயணம், தங்குமிட வசதி, மருத்துவச் செலவு, வாழ்க்கைச் செலவு, வெளிநாட்டு அமைப்பு அல்லது கல்வி நிலையம் ஒன்றின் பதிவுக் கட்டண, பரீட்சைக் கட்டண மற்றும் சந்தாக் கட்டணக் கொடுப்பனவுகள், தனிப்பட்ட பாவனைக்காக வெளிநாட்டில் கொள்வனவு செய்த பொருள்களுக்கான கொடுப்பனவு, தனிப்பட்ட தன்மையிலான பயண மற்றும் மருத்துவக் காப்புறுதிக்கான கட்டுப்பணக் கொடுப்பனவு மற்றும்/அல்லது பயணச்செலவு, ஹொட்டேல் கட்டணங்கள்,

தற்செயலான செலவுகள், மருத்துவச் செலவுகள், தனிப்பட்ட பாவனைக்கான பொருள்களின் கொள்வனவு போன்ற தனிப்பட்ட செலவுகளுக்கென வெளிநாட்டு நாணயத்தில் பணம் செலுத்த வேண்டியிருப்பின் அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் ஏற்படும் மின்னஞ்சல், இணையத்தள மற்றும் தொலைபேசிச் செலவுகள். மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள், வர்த்தக ரீதியில் பெருமளவு பொருள்களின் கொள்வனவு ஆகியவற்றிற்குப் பணம் செலுத்த அட்டையைப் பயன்படுத்தக் கூடாது. தனிப்பட்ட பாவனைக்கென இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான கொடுப்பனவைப் பொறுத்தவரையில், ஒழுங்குபடுத்துனரினால் விதிக்கப்படும் கப்பற்சரக்குக் காப்புறுதிக் கிரயத்தின் (C.I.F) அடிப்படையில் உச்சவரம்பொன்று நிர்ணயிக்கப்படும். “தனிப்பட்ட பாவனை” என்பது அட்டை வைத்திருப்பவரின், அவரது வாழ்க்கைத் துணைவரின், பிள்ளைகளின் அல்லது பெற்றோரின் பாவனையைக் குறிக்கும். ஏதேனும் வர்த்தக நோக்கத்திற்கான பாவனையை இது உள்ளடக்காது.

13.3 இலங்கை ரூபாயை வெளிநாட்டு நாணயமாக மாற்ற வேண்டிய நிலைமை ஏற்படும் விதத்தில் இலங்கையிலிருந்து வெளிநாட்டுக்கு மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல் உட்பட்ட எந்தவொரு கொடுக்கல் வாங்கலையும் தனது சார்பில் மேற்கொள்வதற்குத் தனது அட்டையைப் பயன்படுத்த அட்டை வைத்திருப்பவர் எச் சந்தர்ப்பத்திலும் இன்னொருவருக்கு அனுமதியளிக்கக் கூடாது.

13.4 அட்டை வைத்திருப்பவர் குடிபெயர்ந்தால் அல்லது தொழில் நிமித்தம் வெளிநாடு செல்ல நேர்ந்தால் அல்லது தற்சமயம் நடைமுறையிலுள்ள மற்றும் காலத்திற்குக் காலம் திருத்தப்படக்கூடிய பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் “வதியாதவர்” என்று கருதப்பட்டால், அட்டையை வங்கியிடம் மீள ஒப்படைக்க வேண்டும்.

13.5 பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுச் சட்டம், 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் அதன் கீழான வீதங்கள் வழிகாட்டல்கள் மற்றும் பணிப்புரைகள், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க

வங்கியியல் சட்டம் மற்றும் அதன் கீழ் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் பணிப்புரைகள், இலங்கை மத்திய வங்கி நாணயச் சபையினால் அல்லது வேறேதும் ஒழுங்குபடுத்தும் அமைப்பினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் தொடர்புடைய வழிகாட்டுதல்கள் மற்றும் பணிப்புரைகளின் பிரகாரம் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டாளர் விதித்துள்ள அறிக்கையிடல் நிபந்தனைளை வங்கி அனுசரித்து நடக்கும்.

13.6 நடைமுறையிலுள்ள பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்கள் மீறப்பட்டுள்ளன என்று நம்புவதற்கு வங்கியிடம் ஏதேனும் காரணம் இருக்குமாயின், வங்கியானது அதன் சொந்த முடிவிற்கேற்ப, அட்டை வைத்திருப்பவருக்கு எவ்வித காரணமும் காட்டாமல், அட்டையை இரத்துச்செய்துவிட முடியும்.

13.7 அட்டையானது எல்லா வேளைகளிலும் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் அதன் கீழான பிரமாணங்களுக்கு அமைவாகவே பயன்படுத்தப்படுவதை அட்டை வைத்திருப்பவர் உறுதிப்படுத்த வேண்டும்.

13.8 அட்டை வைத்திருப்பவர் வர்த்தக ரீதியில் பெருமளவு பொருள்களை இறக்குமதி செய்வதற்காக அல்லது மூலதனக் கொடுக்கல் வாங்கல்களுக்காக அட்டையை ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது.

## 14. விதிகளின் மாற்றம்

14.1 வங்கியானது, காலத்திற்குக் காலம், பொருத்தமெனக் கருதும் முறைகளில் (வங்கி பொருத்தமெனக் கருதும் இடங்களில் விளம்பரங்களை வைப்பதும் இதில் உட்படும்) அட்டை வைத்திருப்பவருக்கு அறிவித்தல் கொடுத்துவிட்டு, (கட்டணங்கள் மற்றும் அறவீடுகளை மாற்றுதல் அல்லது புதிய கட்டணங்கள் மற்றும் அறவீடுகளை அறிமுகப்படுத்தல் உள்ளடங்கலாக) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்ற அல்லது புதிய விதிகள் மற்றும் நிபந்தனைகளைச் சேர்க்க உரிமை கொண்டுள்ளது. அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்ட மாற்றங்கள் நடைமுறைக்கு வந்த பின்பும் அட்டையைப் பயன்படுத்தினால், அட்டை வைத்திருப்பவர் எவ்வித தயக்கமுமின்றி அத்தகைய மாற்றங்களை ஏற்றுக்கொண்டார் என்று கருதப்படும். அத்தகைய

மாற்றங்களை அட்டை வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்ளாவிட்டால், மாற்றங்கள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அட்டையையும் ஏதேனும் மேலதிக அட்டைகள் இருப்பின் அவற்றையும் இரத்துச் செய்யப்படுவதற்காக வங்கியிடம் மீள ஒப்படைக்கப்பட வேண்டும்.

14.2 அட்டையின் மற்றும் ஏதேனும் மேலதிக அட்டையின் பாவனை காரணமாக வங்கி எதிர்நோக்கும் அல்லது அதற்கு ஏற்படும் ஏதேனும் இழப்பு, உரிமைக்கோரல்கள், சட்ட நடவடிக்கைகள், வழக்குகள். கோரிக்கைகள், சேதங்கள், கிரயங்கள் மற்றும் செலவுகளுக்கு எதிராக (இந்த ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டாலுங்கூட) இழப்பெதிர்காப்பு வழங்க அட்டை வைத்திருப்பவர் எவ்வித மறுப்புக்கும் இடமின்றி உடன்படுகிறார்.

## 15. தகவல்களின் வெளிப்படுத்தல்

15.1 அட்டை வைத்திருப்பவர் அல்லது மேலதிக அட்டை வைத்திருப்பவர்(கள்) அல்லது அவரின்/அவர்களின் கணக்கு(கள்) பற்றிய தகவல்களை வங்கியினால் பணி ஒப்படைக்கப்பட்ட எவரேனும் மூன்றாம் தரப்பினர், வங்கி பொருத்தமெனக் கருதும் அரச நிறுவனங்கள் மற்றும்/அல்லது ஒழுங்குபடுத்துனர்களுக்கு வெளியிட அட்டை வைத்திருப்பவர் வங்கிக்கு அதிகாரமளிக்கிறார். வங்கியுடனான அட்டை வைத்திருப்பவர் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்ட பின்பும் இந்த அதிகாரமளிப்பு செல்லுபடியாகும்.

15.2 வங்கியானது அதன் தற்றுணிபிற்கேற்ப அட்டை வைத்திருப்பவரின் அட்டைச் செயற்பாடுகள் பற்றிய பதிவேடுகளை இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்துடன் மற்றும்/அல்லது வேறேதும் உள்நாட்டு அல்லது சர்வதேச கடன் தகவல் பணியகத்துடன் பகிர்ந்துகொள்ள முடியும் என்பதை அட்டை வைத்திருப்பவர் இத்தால் ஏற்றுக்கொண்டு, அதற்குச் சம்மதிக்கிறார்.

## 16. எதிரீடு செய்யும் உரிமை

சட்டத்தினால் அல்லது வேறேதும் ஒப்பந்தத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் பொதுவான எதிரீட்டு உரிமை அல்லது வேறு உரிமைகளுக்கு மேலதிகமாக, வங்கியானது, எவ்வித முன்னறிவித்தலும் கொடுக்காமலே, அட்டைக் கணக்கில் மற்றும்/அல்லது மேலதிக/துணை அட்டைக் கணக்கில் எஞ்சியிருக்கும் மீதிப் பணத்தை அட்டை வைத்திருப்பவர் மற்றும்/அல்லது மேலதிக/துணை அட்டை வைத்திருப்பவர்கள் வங்கியில் வைத்திருக்கும் வேறேதும் கணக்குடன் (கணக்குகளுடன்) சேர்த்து அல்லது ஒருங்கிணைத்து, அவ்வாறு பெறப்படும் பணத்தை இந்த ஒப்பந்தத்தின் கீழ் வங்கிக்கான அட்டை வைத்திருப்பவரின் பொறுப்பை ஈடு செய்வதற்குப் பயன்படுத்த முடியும்.

## 17. இந்த ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் தன்மை

17.1 இந்த ஒப்பந்தம் முடிவுறுத்தல் செய்யப்பட்டாலும், அட்டை வைத்திருப்பவரினால் மற்றும் எவரேனும் மேலதிக/துணை அட்டை வைத்திருப்பவரினால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும் அட்டை வைத்திருப்பவரினால் மற்றும் எவரேனும் மேலதிக/துணை அட்டை வைத்திருப்பவரினால் உறப்பட்ட ஏதேனும்/சகல பொறுப்புக்கள் தொடர்பிலும் இங்குள்ள சகல ஏற்பாடுகளும் தொடர்ந்து முழு வலுவுள்ளவையாக இருக்கும்.

17.2 இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் தனித்தனியானவை மற்றும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவை. எதேனுமொரு நேரத்தில் ஏதேனும் அல்லது எவையேனும் விதிகள் அல்லது நிபந்தனைகள் செயலிழந்தவையாக, சட்டவிரோதமானவையாக அல்லது நடைமுறைப்படுத்த முடியாதவையாக மாறினாலும், எஞ்சியுள்ள ஏற்பாடுகளின் செல்லுபடியாகும் தன்மை, சட்டவலு அல்லது நடைமுறைப்படுத்தும் சாத்தியம் அதனால் பாதிக்கப்பட மாட்டாது.

## 18. சட்டம் மற்றும் நியாயாதிக்கம்

இந்த ஒப்பந்தம் இலங்கைச் சட்டங்களினால் ஆளுகை செய்யப்படுவதுடன் அவற்றிற்கு அமைவானவையாகவும் கொள்ளப்படும்.

இதன்படி:

- வங்கி நியாயமான முறையில் கோரும் வாடிக்கையாளர் தகவல்களை வழங்க அட்டை வைத்திருக்கும் ஒருவர் தவறினால், அல்லது.
- ஏதேனும் நோக்கங்களுக்காக வாடிக்கையாளர் தகவல்ளைச் செயற்படுத்த, பரிமாற்ற அல்லது வெளியிட வங்கிக்குத் தேவைப்படும் ஒப்புதலை ஒரு வாடிக்கையாளர் இடைநிறுத்தி வைத்தால் அல்லது வாபஸ் பெற்றால், அல்லது.
- நிதிக் குற்றச்செயல் ஒன்று இடம்பெற்றுள்ளதாக அல்லது வங்கிக்கு நிதிக் குற்ற இடர் சாத்தியத்தை அட்டை வைத்திருக்கும் ஒருவர் ஏற்படுத்துவதாக வங்கி சந்தேகித்தால்,

வங்கியானது:

(a) அட்டை வைத்திருப்பவருக்குப் புதிய சேவைகளை வழங்க அல்லது சேவைகள் முழுவதையும் அல்லது அவற்றில் ஒரு பகுதியைத் தொடர்ந்து வழங்க முடியாதிருக்கும் என்பதுடன், இந்த அட்டை வைத்திருப்பவர் ஒப்பந்தத்தை முடிவுறுத்தும் உரிமையையும் கொண்டிருக்கும்.

(b) இணக்கப்பாட்டுக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்கும்; மற்றும்/அல்லது.

(c) கடன் அட்டைக் கணக்குகளை தடைசெய்யும், மாற்றும் அல்லது மூடிவிடும்.

நிதிக் குற்றங்களின் கண்டுபிடிப்பு, புலன்விசாரணை மற்றும் தடுப்பு சம்பந்தமாக அல்லது அது தொடர்பிலான சட்டங்கள், பிரமாணங்கள், தடையுத்தரவுகள், சர்வதேச வழிகாட்டுதல்கள், வங்கியின் உள்ளகக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும்/அல்லது ஏதேனும் அதிகார அமைப்புக்களின் கோரிக்கைகளுக்குப் பணிந்தொழுகுவதற்கும் (தமது தனி மற்றும் பூரண தற்றுணிபின் பேரில்) பொருத்தமான ஏதேனும் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் வங்கியும் அதன் அங்கத்துவ அமைப்புக்களும் கடமைப்பட்டுள்ளன ("நிதிக் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கை").

அத்தகைய நடவடிக்கைகளுள் பின்வருவன (ஆனால் அவை மட்டுமல்ல) உள்ளடங்கும்: (a) வாடிக்கையாளருக்கு அல்லது வாடிக்கையாளரினால் அல்லது அவர் சார்பில் அனுப்பப்பட்ட ஏதேனும் அறிவுறுத்தல், தொடர்பாடல், மீளப்பெறல் வேண்டுகோள், சேவைகளுக்கான விண்ணப்பம் அல்லது ஏதேனும் கொடுப்பனவு பற்றிச் சோதனையிடுதல், இடைமறித்தல் மற்றும் புலன்விசாரணை செய்தல். (b) நிதிகளின் மூலவிடம் அல்லது உத்தேச பெறுநர் பற்றிப் புலன்விசாரணை செய்தல். (c) கடன் அட்டை வைத்திருப்பவர் வழங்கிய தகவல்களை வங்கியிடமுள்ள ஏனைய தொடர்புடைய தகவல்களுடன் இணைத்துப் பார்த்தல். (d) குறிப்பிட்ட ஆளின் அல்லது நிறுவனத்தின் அந்தஸ்தை மேலும் விசாரித்து, அவர்களுக்கு எதிராக ஏதேனும் தடையுத்தரவு உள்ளதா என்பதை அறிதல் அல்லது வாடிக்கையாளர் ஒருவரின் அடையாளம் மற்றும் அந்தஸ்தை ஊர்ஜிதம் செய்தல்.

விதிவிலக்காக, நிதிக் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை வங்கி மேற்கொள்வதன் காரணமாக, வங்கியானது ஏதேனும் கொடுப்பனவை, சேவைகளுக்காக அட்டை வைத்திருப்பவர் விடுக்கும் அறிவுறுத்தல்களை அல்லது விண்ணப்பங்ளை அல்லது சேவைகள் முழுவதையுமோ அவற்றில் ஒரு பகுதியையோ தாமதிக்கக்கூடும், தடைசெய்யக்கூடும் அல்லது வழங்குவதற்கோ அங்கீகரிப்பதற்கோ மறுக்கக்கூடும். சட்டம் அனுமதிக்கும் அளவுக்கு, நிதிக் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை வங்கி மேற்கொள்வதால், முழுமையாக அல்லது பகுதியளவில், அட்டை வைத்திருப்பவருக்கு அல்லது எவரேனும் மூன்றாம் தரப்பினருக்கு ஏதேனும் வழியில் ஏற்படும் இழப்பு அல்லது பாதிப்புக்காக வங்கியோ அல்லது அதன் அங்கத்துவ அமைப்புக்களோ அட்டை வைத்திருப்பவருக்கு அல்லது அந்த மூன்றாம் தரப்பிற்குப் பொறுப்பாளியாக மாட்டா.

## 19. வரி இணக்கப்பாடு

வங்கியினால் வழங்கப்படும் அட்டை மற்றும் சேவைளைப் பெற்றுப் பயன்படுத்துவது தொடர்பில், எல்லா நியாயாதிக்கப் பிரதேசங்களிலும் எழக்கூடிய வரிக் கடப்பாடுகளை (வரிக் கொடுப்பனவைச் செலுத்துதல் அல்லது சகல பொருத்தமான வரிகள் தொடர்பிலும் வருமான வரிப் பத்திரங்கள் அல்லது ஏனைய ஆவணங்களை நிரப்புதல் என்பனவும் உட்படும்) புரிந்துகொண்டு அவற்றிற்கு இணங்கியொழுகுவது அட்டை வைத்திருப்பவரின்

தனிப் பொறுப்பாகும் என்பதை அட்டை வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கிறார். அட்டை வைத்திருப்பவரின் சார்பில் செயற்படும் ஒவ்வெரு தொடர்புபட்ட நபரும், தொடர்புபட்ட நபர் என்ற முறையில் (அவரது தனிப்பட்ட முறையில் அல்ல) தானாகவே இதே ஒப்புதலைச் செய்ய வேண்டும். தொடர்புபட்ட நபர் அல்லது அட்டை வைத்திருப்பவர் வாழும் நாடு, வசிப்பிடம், அவரது பிரஜாவுரிமை அல்லது கூட்டிணைப்பு எவ்வாறாக இருந்தாலும், சம்பந்தப்பட்ட பிரதேசத்திற்கு வெளியிலும் செல்லுபடியாகக்கூடிய வரிச் சட்டங்களை சில நாடுகள் கொண்டிருக்கலாம். வங்கியானது வரி ஆலோசனைகளை வழங்க மாட்டாது. சுயாதீன சட்ட மற்றும் வரி ஆலோசனையை நாடும்படி அட்டை வைத்திருப்பவருக்கு ஆலோசனை கூறப்படுகின்றது. எந்தவொரு நியாயாதிக்கப் பிரதேசத்திலும் அட்டை வைத்திருப்பவரின் வரிக் கடப்பாடுகள் தொடர்பாக வங்கிக்கு எவ்வித பொறுப்பும் கிடையாது. குறிப்பாக, அட்டைக் கணக்கை ஆரம்பித்துப் பயன்படுத்துதல் மற்றும் வங்கியினால் வழங்கப்படும் சேவைகளைப் பெறுதல் தொடர்பான விடயங்களும் இதில் உள்ளடங்கும்.

இந்த விதிகளுக்கும் வங்கியின் வேறேதும் சேவைகளின், வசதிகளின், வியாபார உறவுகளின் அல்லது வாடிக்கையாளருக்கும் வங்கிக்கும் இடையிலான ஏதேனும் ஒப்பந்தத்தின் விதிகளுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது பொருத்தமின்மை காணப்படின், இந்த விதிகளே மேலாதிக்கம் செலுத்தும். பொருத்தமான உள்நாட்டுச் சட்டத்தினால் அனுமதிக்கப்படும் அளவிற்கு, வாடிக்கையாளிடமிருந்து ஏற்கனவே பெறப்பட்ட ஏதேனும் ஒப்புதல்கள், அதிகாரமளிப்புக்கள், தள்ளுபடிக்கான வேண்டுதல்கள் மற்றும் அனுமதிகள் தொடர்ந்து செயல்வலுவுள்ளவையாக இருக்கும்.

## 20. நானாவித விடயங்கள்

20.1 எந்தவொரு நியாயாதிக்கத்தினதும் சட்டத்தின் கீழ் இந்த விதிகள் அல்லது நிபந்தனைகள் அனைத்தும் அல்லது அவற்றின் ஒரு பகுதி செயலிழந்தவையாக, சட்டவிரோதமானவையாக அல்லது நடைமுறைப்படுத்த முடியாதவையாக மாறினாலும், அவற்றின் செல்லுபடியாகும் தன்மை, சட்டவலு அல்லது நடைமுறைப்படுத்தும் சாத்தியம் வேறேதும் நியாயாதிக்கத்திலும் பாதிக்கப்பட

மாட்டாது. அவ்வாறே, எஞ்சியுள்ள விதிகளின் செல்லுபடியாகும் தன்மை முன்சொல்லப்பட்ட நியாயாதிக்கத்தில் பாதிக்கப்பட மாட்டாது.

## 21. முடிவுறுத்தலின் பின்பும் நிலைத்திருக்கும் தன்மை

இந்த விதிகள் முடிவுறுத்தப்பட்டாலும், செலான் வங்கியினால் அல்லது அதன் அங்கத்துவ அமைப்பு ஒன்றினால் அட்டை வைத்திருப்பவருக்கு வழங்கப்படும் ஏதேனும் சேவை முடிவுறுத்தப்பட்டாலும், அல்லது அட்டை வைத்திருப்பவரின் ஏதேனும் கணக்கு மூடப்பட்டாலும், இந்த விதிகள் தொடர்ந்து செல்லுபடியாகும்.